சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 23.08.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# ஒருவாரம் ஊரடங்கு போதும்

## ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்டுள்ள வலியுறுத்தல்

(காந்தன்)

இரண்டு வாரகாலத்திற்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மாத இறுதி வரையில் ஊரடங்கை நீடிக்காது ஒரு வார காலத்துடன் தளர்த்த நடவடிக்கை எடுக்க முடியுமென்றால் அது குறித்து ஆராயுமாறு ஆளுந்தரப்பு அமைச்சர்கள் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளனர்.

பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் தேரர்களின் அழுத்தம் காரணமாக எதிர்வரும் 31ஆம் திகதி வரையில்நாட்டை முடக்குவதாக ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில் அமைச்சர்கள் சிலர் இது குறித்து ஜனாதிபதியிடம்கலந்துரையாடியுள்ளனர். குறிப்பாக நாட்டின் தற்போதைய பொருளாதார

02 ஆம் பக்கத்தில்...

## மேல்மாகாணத்தில் அதிகரிக்கும் டெல்டா

மேல் மாகாணத்தில் டெல்டா கொரோனா வைரஸ் வேகமாக பரவுகின்றது என பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் டெல்டா கொரோனா வைரஸ் மாறுபாட்டின் நான்கு பிறழ்வுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சமூகத்தில் வேகமாக பரவும் டெல்டா கொரோனா வைரஸ் காரணமாக நான்கு பிறழ்வுகள் ஏற்பட்டுள்ளன என பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்துள்ளார்.

வேகமாக பரவும் நிலை காணப்படும்

02 ஆம் பக்கத்தில்...

## ஈஸ்டர் தாக்குதல் தோடர்பில் மூவின மக்களும் ஒன்றான இணைந்து குரல்கோடுக்க வேண்டும்



(மட்டக்களப்பு விசேட நிருபர் )

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் என அனைத்து மதத்தினரும் ஒன்றான இணைந்து இதற்காக குரல்கொடுத்து உண்மையினை கண்டறியவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று 28 மாதங்களை கடந்துள்ள நிலையில் நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ள

02 ஆம் பக்கத்தில்...

## அரசாங்கத்தின் அசமந்த செயற்பாடுகள் மக்களை பாதித்து வருகிறது

அரசாங்கம் தான்தோன்றித்தனமாக ஒவ்வொரு செயற்பாட்டையும் முன்னெடுப்பதினால் பொது மக்கள் தான் அதிகளவு அவதிக்குள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, நாட்டில் தீடீரென கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்த வேளையில், மருத்துவர்களும் சுகாதார தரப்பினரும் இணைந்து நாட்டை முடக்கி கொரனாவை கட்டுப்படுத்துங்கள் என்ற

02 ஆம் பக்கத்தில்...



## மட்டு.போதனா வைத்தியசாலை ஊழியர் கோவிட் தோற்றில் மரணம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஊழியர் ஒருவர் கொவிட் தொற்றுக்குள்ளாகி மரணமடைந்துள்ளார்.

இதுவே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஊழியர் ஒருவர் தொற்றினால் உயிரிழந்த முதல் சம்பவம் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் சுகாதார உதவியாளராக கடமையாற்றும் கிரான்குளத்தைச்சேர்ந்த 31வயதுடைய பெண் என வைத்தியசாலையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## கிண்ணியாவில் நடமாடும் தடுப்பூசி ஏற்றல்

(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடமாடும் சேவைகள் மூலம் தடுப்பூசி டோஸ் ஏற்றும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.றிஸ்வி தலைமையில் சுகாதார

02 ஆம் பக்கத்தில்...

## விருப்பத்துக்கு காத்திருக்காதீர்கள் உடனடியாக கிடைப்பதை பேறுங்கள்

(ஊர்காவலன்)

தமக்கு விருப்பமான தடுப்பூசிக்காக காத்திருக்காமல், கிடைக்கபெறும் ஏதேனும் ஒரு தடுப்பூசியை செலுத்திக்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முற்பகல் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இந்த விடயத்திகைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அவ்வாறே 60 வயதுக்கு மேற்பட்டோர் முடியுமானவரை விரைவாக, தமக்கு அருகிலுள்ள தடுப்பூசி செலுத்தல் நிலையத்துக்கு சென்று தடுப்பூசி பெற்றுக்கொள்ளுங்கள்.

02 ஆம் பக்கத்தில்...

## அம்பாறை மாவட்டத்தில் ஐந்து நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு இடமாற்றம்

(பைஷல் இஸ்மாயில்)

அம்பாறை மாவட்டத்தில் ஐந்து இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் செயல்படும் வண்ணம் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில்,

1. லகுகல பிரதேச செயலாளர் சந்தரூபன் அனுருத்த அம்பாறை பிரதேச செயலாளராகவும்,

2. அம்பாறை பிரதேச செயலாளர் எம்.எஸ். என். சொய்ஸா சிறிவர்தன

02 ஆம் பக்கத்தில்...


MULTI CONSULTING
Versicherung & Finanz
சமூக அக்கறை எமது இலக்கு
குறைந்த வட்டி வீதத்தில்
வங்கிக்கடன், வீட்டுக்கடன்
Im Rietpark 5 ,8180 Bülach, Zürich, Switzerland
info@multiconsulting.ch
079 765 50 57 www.multiconsulting.ch


## மட்டில் 60 வயதுக்கு மேற்பட்டோர் 8855 பேர் இன்னும் தடுப்பூசி பேறவில்லை

(படுவான்பாலகன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டோரில் 8855பேர் இன்னும் கொவிட்தடுப்பூசிபெறவில்லையெனவும் இவர்கள் அனைவரும் தடுப்பூசிகளைப்பெற்றுக்கொள்ளமுன்வரவேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

பிரதேசரீதியாக கோறளைப்பற்று வடக்கு 419 கோ.ப மத்தி 294 கோ.ப.மேற்கு20 கோறளைப்பற்று245 கோ.ப தெற்கு 258 ஏறாவூர்பற்று680 ,ஏறாவூர்நகரம்85, மண்முனைவடக்கு3020, காத்தான்குடி 162, மண்முனைப்பற்று 389 , மண்முனை தென் எருவில் பற்று 1732, போறவீவுப்பற்று489 ,மண்முனை தென்மேற்கு325, மண்முனை மேற்கு 737 என தெரிவிக்கப்படுகின்றது.


“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206







## 2 கிலோ கேரளா கஞ்சாவுடன் பிரபல தமிழ் வர்த்தகர் மாவடி வேம்பில் கைது

(குகதர்சன்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிறைந்துரைச்சேனை பிரதேசத்திற்கு கொண்டு வரத்தயார் நிலையிலிருந்த 2 கிலோ கேரளா கஞ்சாவுடன் மாவடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் போதைப்பொருள் வர்த்தகரொருவர் அவரது வீட்டில் வைத்து நேற்று 32சூ ஞாயிற்றுக்கிழமை மாலை 06.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத்

02 ஆம் பக்கத்தில்...


“சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”









## ஓட்டமாவடி மஜ்மா நகரில் உடல்கள் நல்லடக்கம் 2000 ஐ தாண்டியது

( எச்.எம்.எம்.பர்ஸான்)

கொரோனா தொற்றினால் மரணமடைந்த நபர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடியில் உடல்கள்

02 ஆம் பக்கத்தில்...

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

## ஓட்டமாவடி மஜ்மா நகரில் உடல்கள் நல்லடக்கம் 2000 ஐ தாண்டியது

நல்லடக்கம் இரண்டாயிரத்தை தாண்டியுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை அடக்கம் செய்யப்பட்ட 48 உடல்களுடன் இதுவரை மொத்தமாக 2018 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடிக்கு தற்போது நாளொன்றுக்கு 30 தொடக்கம் 50 வரையான சடலங்கள் நல்லடக்கத்துக்கு வருவதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி மாத்திரம் 53 உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதுவே ஒரே நாளில் அதிகூடிய உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட நாளாக பதிவாகியுள்ளது.

## 2 கிலோ கேரளா கஞ்சாவுடன் பிரபல தமிழ் வர்த்தகர் மாவடி

தகவலுக்கமைய ஏறாவூர் பொலிஸ் நிலைய பொலிசாரோடு இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த போதைப்பொருள் வர்த்தகரே அதிகளவான கேரளா கஞ்சா போன்ற போதைப் பொருட்களை பிறைந்துரைச்சேனை பிரதேசத்துக்கு வினியோகித்து வந்துள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

33 வயதுடைய இவரிடமிருந்து 2 கிலோ கேரளா கஞ்சாவுடன் போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தொடர் நடவடிக்கை காரணமாக மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் போதை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் உட்பட போதைப்பொருளுடன் தொடர்புபட்ட பலர் கைது செய்யப்பட்டு வருவதுடன், வெளிமாவட்டங்களிலிருந்து கல்குடா பிரதேசத்துக்கு போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளை கடத்தி வருவோரும் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கொரோனா அதிகரிப்பினால் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டு மக்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ள நிலையில், உயிர் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் இவ்வாறான நாசகாரச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரை கைது செய்யும் நடவடிக்கையில் வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் எடுத்து வரும் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

## அம்பாறை மாவட்டத்தில் ஐந்து நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும்,

3.அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சட்டத்தரணி ஏ.எம்.லத்தீப் நிந்தவூர் பிரதேச செயலாளராகவும்,

4.நிந்தவூர் பிரதேச செயலாளர் அஷ்ஷேக் ரீ.எம்.எம். அன்ஷார் (நளீமி) அக்கரைப்பற்று பிரதேச செயலாளராகவும்,

5.அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்ஷேக் எம்.எஸ்.எம்.றஸான் இறக்காமம் பிரதேச செயலாளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்த இடமாற்றங்கள் யாவும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விருப்பத்துக்கு காத்திருக்காதீர்கள் உடனடியாக கிடைப்பதை

தற்போது கொரோனா தொற்றால் மரணிப்பவர்களில் 70 முதல் 80 சதவீதமானோர் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்கள். கடந்த இரண்டு வாரங்களுக்குள் தொற்றுறுதியானவர்களே தற்போது அடையாளம் காணப்படுகின்றனர். எனவே, இதனை தற்போது தடுத்தால் இதன் பெறுபேறுகள் எதிர்வரும் இரண்டு வாரங்களில் தெரியவரும். இந்த செயற்பாடு மிகவும் முக்கியமானதாகும்.

இதனை தற்போது நிறுத்துவதனால் தொற்று பரவலை வெகுவாக கட்டுப்படுத்த முடியும். எனவே மக்கள் தனிமைப்படுத்தல் விதிகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மூவின மக்களும் ஒன்றான

மக்களுக்கான நீதியைப்பெற்றுக்கொடுப்பதற்கு வடகிழக்கில் உள்ள அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து குரல் எழுப்பவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதிவேண்டி இன்றைய தினம் கறுப்புக்கொடிகளை கட்டுமாறு பேராயர் மல்கம் ஆண்டகை விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தனது அலுவலகத்திற்கு முன்பாக கறுப்புக்கொடியை ஏற்றிவைத்தார்.

ஈஸ்டர் தினத்தன்று மட்டக்களப்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் உள்ள தேவாலயங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருந்ததுடன் படுகாயங்களும் அடைந்திருந்தனர்.

இந்த நிலையில் ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை திருப்தி அளிக்கவில்லை என கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி கத்தோலிக்க திருச்சபை ஜனாதிபதிக்கு ஒன்றை கடிதத்தை அனுப்பியிருந்தது.

அதனடிப்படையில், தாக்குதலுக்கு காரணமானவர்களை இதுவரையில் இனங்காண அரசாங்கம் தவறிய காரணத்தினால், சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இன்று நாடு முழுவதும் கருப்பு கொடி ஏற்றுமாறு பேராயர் மல்கம் ஆண்டகை வேண்டுகோள்விடுத்திருந்தார். அதனடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் தனது அலுலகத்திற்கு முன்பாக இன்று காலை கறுப்புக்கொடியை ஏற்றி தனது ஆதரவினை பேராயருக்கு வழங்கியுள்ளார்.

அனைத்து இன,மத மக்களும் இணைந்து ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான உண்மையினை கண்டுபிடிக்க அழுத்தங்களை வழங்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது வேண்டுகோள்விடுத்தார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருதது தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்,

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று இன்றுடன் 28மாதங்கள் பூர்த்தியடைகின்றது.பேராயர் மல்கம் ஆண்டகை கறுப்புக்கொடிகளை இன்றைய தினம் எட்டுமாறு வேண்டுகோள்விடுத்திருந்தார்.அந்த நிகழ்வில் நானும் இன்று இணைந்திருந்தேன்.

கடந்த காலத்தில் பேராயர் மல்கம் ஆண்டகை உட்பட தெற்கில் உள்ள கத்தோலிக்க மதகுருக்கள் வடகிழக்கில் நடந்த அநீதிகளுக்கு குரல்கொடுக்கவில்லை,நீங்கள் ஏன் அவர்களுக்காக குரல்கொடுக்கின்றீர்கள் என்று விமர்சனங்கள் முன்வைக்கப்படும்.

இருந்தபோதிலும் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் என்பது நடைபெற்றபோது அதில் பெருமளவு பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களாகும்.மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தாக்குதலில் 31பேர் உயிரிழந்திருந்ததுடன் அதில் 15க்கும் மேற்பட்ட சிறுவர்களும் உயிரிழந்திருந்தனர்.அந்த தாக்குதலில் இரண்டு கண்களையும் இழந்த சிறுமியொருவர் தனது தாய்தந்தையரையும் இழந்த நிலையில் இன்று உள்ளார்.இவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்பதற்கான விடையை கேட்கவேண்டிய தேவையுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருக்கட்டும் இலங்கை தமிழரசுக்கட்சியாக இருக்கட்டும் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக குரல்கொடுக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.யாரும் செய்யவில்லையென்பதைபற்றி கதைப்பது அநாவசியமாகும்.நாங்கள் நீதிகேட்கவேண்டிய நிலையுள்ளதனால் அதனை கேட்கவேண்டும்.அதன்காரணமாக நான் இதற்கு ஆதரவு வழங்கியுள்ளேன்.

நேற்றைய தினம் ஜனாதிபதி அவர்கள் விசேட உரையென்று கூறிக்கொண்டு நகைச்சுவை படம் ஒன்றினை 10நிமிடங்கள் ஓட்டினார்.இந்த அரசாங்கம் மக்கள் நலன் தொடர்பில் சிந்திக்காத அரசாங்கம் என்பதற்கு உதாரணம் அந்த உரையினைத்தவிர வேறு எதுவும்தேவையில்லை.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் 250க்கு மேற்பட்டவர்கள்தான் உயிரிழந்திருந்தனர். ஆனால் இந்த நாட்டில் %000க்கும் அதிகமானவர்களை இன்றைய கொரனா தொற்றினால் இழந்திருக்கின்றோம்.நாட்டின் ஜனாதிபதி அவர்கள் நாட்டின் கடன்களை கட்டவேண்டும்,வேலைவாய்ப்பினை பாதுகாக்கவேண்டும்,வியாபாரங்களை பாதுகாக்கவேண்டும் என்று கூறுகின்றாரே தவிர நாட்டின் மக்களின் உயிரைப்பாதுகாக்கவேண்டும் என்று கூறியது மிகவும் குறைவு.

பேராயர் மல்கம்ஆண்டகை இந்த விடயத்தினை தனது கையிலெடுத்து தொடர்ந்து ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு நீதிகோரிவருவதன் காரணத்தினால் இதற்கு ஒரு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிருந்தது.2009ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது படுகொலைசெய்யப்பட்டவர்களுக்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லை.இறுதியுத்தத்திற்கு முற்பட்ட காலத்தில் மதத்தலைவர்கள் கடத்தப்பட்டார்கள்,கொல்லப்பட்டார்கள்,தேவாலயங்கள் மீது குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டு அங்கு தஞ்சடைந்திருந்த பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.அவர்களுக்கான நீதியும் கிடைக்கவில்லை.

இவ்வாறான நிலையில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவம் ஒன்றுக்கு இந்த நாட்டிற்குள் உடனடியாக தீர்வு கிடைப்பது என்பது கஸ்டம்தான்.

இருந்தபோதிலும் பேராயர் மல்கம்ஆண்டகை அதன்மீது நம்பிக்கைகொண்டு அது தொடர்பான அறிக்கைகளை விடுத்திருந்தார். அதில் தாக்குதல்தாரிகளுடன் தொடர்புபட்டவர்களின் பெயர்களை வெளிப்படுத்தியிருந்தார். கடந்த காலத்தில் இஸ்லாமிய கடும்போக்கு சக்திகள் ஒரு சிலதை பயன்படுத்தி யாரோ ஒருவர் தமிழர்,சிங்களவர் மீது ஒரு தாக்குதலை நடாத்தினார் என்று சொன்னால் நாளை பௌத்த மதத்தினை சேர்ந்த ஒருவரையோ,சைவசமயத்தினை சேர்ந்த ஒருவரையோ வைத்து ஒரு தாக்குதலை அவர் நடாத்தமாட்டார் என்பதற்கு என்ன உறுதி இருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளிவைப்பதாகயிருந்தால் நடந்தது என்ன என்பதை வெளிப்படுத்தவேண்டும்.அதற்கு நாங்கள் நிச்சயமாக குரல்கொடுப்போம்..

ஈஸ்டர் குண்டுவெடிப்பு நடப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டனர்.அவர்களை கொலைசெய்ததாக கூறி முன்னாள் போராளி அஜந்தன் என்பவரை கைதுசெய்தார்கள்.அது நடைபெற்று இரண்டு வருடங்களின் பின்னர் ஈஸ்டர் தாக்குதல் நடாத்தியவர்கள்தான் அந்த பொலிஸாரை கொலைசெய்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதனால் எதற்காக முன்னாள் போராளி அஜந்தனை தடுத்துவைத்துள்ளீர்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா கேட்டு கடிதம் எழுதிய பின்னரே அவரை விடுதலைசெய்திருந்தார்கள்.

அந்த நேரத்திலேயே இந்த கொலைகளைச் செய்து அதன் பழியை முன்னாள் போராளிகள் மீது சுமத்தப்பட்டது.மாவீரர் தினம் நடைபெற்று சில தினங்களின் பின்னரே வவுணதீவு சம்பவம் நடைபெற்றது.அன்று கொல்லப்பட்ட அந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கும் நீதிவேண்டும்.ஒருவேளை அந்த ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நடாத்தியவர்கள்தான் இந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை படுகொலைசெய்தார்கள் என்பது கண்டறியப்படாமலிருந்திருந்தால் அஜந்தன் இன்றுவரையில் சிறையிலிருந்திருப்பார். அதனை வைத்து இன்னும் ஆயிரம் முன்னாள் போராளிகளை கைதுசெய்திருப்பார்கள்.

அரசாங்கத்துடன் இணைந்துகொண்டு அரசாங்கத்திற்கு உதவி செய்து,தமிழர்களைக் கொலைசெய்து இன்று வரையில் புனர்வாழ்வளிக்கப்படாத நிலையுள்ள ஒட்டுக்குழுக்களுக்கே புனர்வாழ்வளிக்கவேண்டும் என்று நான்கோரிவருகின்றேன்.விடுதலைப்போராட்டத்திலிருந்தவர்களை நான் கூறிவில்லை. ஆனால் விடுதலைப்போராட்டத்தினை காட்டிக்கொடுத்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டவர்களுக்கே அரசாங்கம் முறையான புனர்வாழ்வினை அளிக்கவேண்டும் என்று கூறுகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டிருந்தோம்.அந்த பெற்றோர்,உறவினர்கள்பட்ட கவலையினை நாங்கள் பார்த்தோம்.உண்மையில் இந்த நாட்டில் தமிழ்,முஸ்லிம்,சிங்களவர்கள் என அனைத்து மதத்தினரும் ஒன்றான இணைந்து இதற்காக குரல்கொடுத்து உண்மையினை கண்டறியவேண்டும்.

இன்று இதன் உண்மையினைக்கண்டறியாமல் விடுவோமானால் நாளை தினம் இவ்வாறான சம்பவங்கள் நாளையும் நடக்கலாம். இதனை இயக்கியதாக சும்மா பெயர்களை குறிப்பிடுவதை விடுத்து தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டறியப்படவேண்டும்.அமைச்சர் சரத் வீரசேகர கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பில் சில கருத்துகளை வெளிப்படுத்தியிருந்தார்.பேராயர் அவர்களே கூறுகின்றார் நீங்கள் கைதுசெய்துள்ளவர்கள் சின்ன மீன்கள்,பெரியமீன்கள் எல்லாம் வெளியில் சுற்றுகின்றது என்று.அந்த பெரிய மீன்கள் யார்? பேராயரின் கோரிக்கையென்பது நியாயமானது.

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று 28மாதங்களை கடந்துள்ள நிலையில் நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ள மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு வடகிழக்கில் உள்ள அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து குரல் எழுப்பவேண்டும். இருந்தபோதிலும் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் சிலர் கடந்த காலத்தில் பல குற்றச் செயல்களை செய்தவர்களாக இருக்கலாம். அதனால் கொல்லப்பட்டவர்களுக்கு நீதிகேட்க தயங்கலாம்.

ஆனால் ஆகக்குறைந்தது சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராகயிருந்தபோது ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த 31குடும்பங்களுக்கும் அமைத்து கொடுக்கப்பட்ட வீடுகள் கூட இன்று நிறைவுபெறாத நிலையிலுள்ளது. அரசாங்கத்தின் கைக்கூலிகளாக இருப்பவர்கள் அந்த வீடுகளையாவது பூர்த்திசெய்து வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் இன்று உயர் பதவிகளில் இருக்கும் பொலிஸ் அதிகாரிகள் அஸ்கீரிய,மல்வத்து பீடங்களை சென்று சந்தித்து தங்களை பாதுகாக்குமாறு கோருகின்றனர்.ஈஸ்டர் தாக்குதலில் தங்களை குற்றவாளிகளாக மாற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்திருக்கின்றனர்.இது ஒரு நாடகமா அல்லது உண்மையாக அவர்களின் நிலைமையினை போய்ச்சொன்னர்களா தெரியாது.ஆனால் பொலிஸ் பிரிவில் அதியுயர் பதவியிலிருப்பர்கள் மதத்தலைவர்களிடம் சென்று நீதிகேட்கும் நிலையேற்பட்டுள்ளது என்றால் இந்த நாட்டின் நிலைமை என்ன என்பது புரிகின்றது.செய்தவர்களை விடுத்து தங்களை குற்றவாளிகளாக மாற்ற முற்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். அவ்வாறானால் செய்தவர்கள் யார் என்ற கேள்வி எழுகின்றது. இன்று இந்த ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் இந்தளவுக்குத்தான் உள்ளது என்றார்.

## கிண்ணியாவில் நடமாடும் தடுப்பூசி ஏற்றல்

வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள், பொது சுகாதார அதிகாரிகள், மருத்துவ தாதிகள் சகிதம் வீடு வீடாக தேடிச் சென்று டோஸ் சினோஃபார்ம் முதலாவது தடுப்பூசியை நேற்று வழங்கி வைத்தனர்.

இதன் மூலம் கணவனை இழந்து வீடுகளில் இத்தா கடமையில் இருக்கும் பெண்கள், மற்றும் நோயாளிகள், வயது முதிர்ந்தோர்கள் என பலர் முதலாவது டோஸ் தடுப்பூசியை பெற்றுக் கொண்டார்கள்.

## மேல்மாகாணத்தில் அதிகரிக்கும் டெல்டா

போது பிறழ்வுகள் வேகமாக இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

டெல்டா கொரோனா வைரஸ் மாறுபாட்டின் ஒரு பிறழ்வு( ஏ 222வி) பல நாடுகளில் காணப்படுகின்றது இன்னொன்று (ஏ 1078 எஸ்) இலங்கையிலும் மலேசியாவிலும் காணப்படுகின்றது என தெரிவித்துள்ள அவர் ஏனைய இரண்டும் இலங்கையில் மாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளார்.

மேல்மாகாணத்தில் கொரோனா டெல்டா வைரஸ் வேகமாக பரவுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தடுப்பூசிகளில் பலன் அளிப்பதால் மக்கள் கரிசனை கொள்ளவேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

## அரசாங்கத்தின் அசமந்த செயற்பாடுகள்

கோரிக்கையை முன்வைத்தனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால், அதன்போது அந்த விடயத்தை கவனத்தில் கொள்ளாமல் செயற்பட்டுவந்த அரசாங்கம், தற்போது வேண்டா வெறுப்பாக எத்துயர் ஏற்பட்டாலும் அதனை மக்களே எதிர்கொள்ளட்டும் என்ற விரோத சிந்தனையுடன் திடீரென நாட்டை முடக்குவதாக தெரிவித்துள்ளது என செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் அரசாங்கத்தின் திடீர் அறிவிப்பினால், பொது மக்கள் பலரும் நகர்ப்பகுதியில் அதிகளவில் ஒன்று கூடியிருந்தனர். இது கொரோனா தொற்றை நிறுத்துவதற்கு பதிலாக அதிகரிப்புக்கே வழிவகுத்துள்ளது என அவர் கூறியுள்ளார். அதாவது வங்கிகள், நகை அடகு வைக்கும் இடங்களில் மக்கள் அதிகமாக காணப்பட்டனர். வர்த்தக நிலையங்களில் நீண்ட வரிசை காணப்பட்டது. இது பாரதூரமான விளைவை ஏற்படுத்துமென செல்வம் அடைக்கலநாதன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கம் ஒரு நாள் தவணை வழங்கி நாட்டை முடக்கியிருக்கலாம். திட்டமிடல் இல்லாத அரசாங்கத்தால் மக்களே தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர் என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

## ஒருவாரம் ஊரடங்கு போதும்

நிலைமைகள், கடன் நெருக்கடிநிலைமைகள் குறித்தும் எடுத்துக்கூறியுள்ளனர்.

நாட்டின் சுகாதார நிலைமைகள் மற்றும் கொவிட் அச்சுறுத்தல் நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தும் அதேவேளையில் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி நாட்டின் அத்தியாவசிய செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளதாகவும், அத்தியாவசிய சேவைகளை முடக்கி மக்களுக்கு நிவாரணங்களைவழங்குவது கடினமான ஒன்றாக உள்ளதாகவும்,அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல் கடன் நெருக்கடி நிலைமைகள் குறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளதாகவும், இந்தஆண்டு இறுதி மற்றும் அடுத்த ஆண்டு முதல் காலாண்டுக்கான கடன் செலுத்த வேண்டிய நிலைமைகளை சரியாக கையாள வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டை நீண்ட காலம் முடக்குவது அரசாங்கத்திற்குகூடிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதை நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால்சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் இறுதியாக கூடிய வாழ்க்கை செலவு பற்றிய அமைச்சரவை உபகுழுவிழும் பங்குபற்றியஅமைச்சர்கள் பொருளாதார நிலைமைகள் குறித்தும், மக்களுக்கான நிவாரணம் வழங்குவது குறித்தும்ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளனர். முடியுமானால் கடுமையான சுகாதார வழிமுறைகளை கையாண்டுசட்டங்களையேனும் பிறப்பித்து மக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார வழிமுறைகளுடன்நாட்டை விரைவில் திறக்கும் பொறிமுறை ஒன்றினை கையாள்வது குறித்து ஆராயுமாறும் அமைச்சர்கள்வலியுறுத்தியுள்ளனர்.

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

# கால சூழ்நிலையை அறிந்து ஒத்துழைத்து மக்கள் விழிப்புடன் அவதானமாக வீட்டில் இருங்கள்

## அனர்த்த முகாமைத்துவ அணி வேண்டுகோள்

(மாளிகைக்காடு நிருபர்)

நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணி ஊடாக வழிப்புணர்வு நிகழ்வு நிந்தவூர் பூராகவும் இடம்பெற்று வருகின்றது. நிந்தவூரில் கொரோனா கோரத் தாண்டவம் ஆடத் தொடங்கியுள்ளது. தினமும் கொரோனா மரணம் விழும் ஒரு ஊராக நிலை மாறிக் கொண்டிருக்கின்றது. இதுவரை 15 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளது.

கொரோனா தோற்றாளர்களின் எண்ணிக்கை கட்டுப்பாட்டை இழந்து 500 ஐ எட்டிக் கொண்டிருக்கின்றது. தொடர் பரிசோதனையில் பலர் தொற்றாளர்களாக நாளாந்தம் இனங்காணப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அதிகரித்துவரும் கொரோனா மரணம் மற்றும் தொற்றினை கட்டுப்படுத்த முடியாமல் சுகாதாரத் துறை கதிகலகங்கிப் போயுள்ள தருணமிது. கொரோனா தொற்றளர் தொகை தினமும் அதிகரிப்பதன் காரணமாக வைத்தியசாலைகள் இட நெருக்கடியியையும் ஊழியர் பற்றாக் குறையினையும், ஒட்சிசன் வாயுவின் தட்டுப்பாட்டையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. என நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிவித்தலில் மேலும், அதிகரித்துவரும் மரணம் மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கை காரணமாக நிந்தவூர் பிரதேசம் அதிக தொற்று ஆபத்துள்ள சிவப்பு எச்சரிக்கை வலயமாக அறிவிக்கப்பட்டு முற்றாக முடக்கப்படும் அபாயம் உள்ளது.

எனவே எதிர்நோக்கிவரும் ஆபத்தான சூழ்நிலையிலிருந்து எம்மைப் பாதுகாக்கவும், நாம் இப்போதிருக்கும் நிலையிலிருந்து மீளவும், சுகாதாரப் பிரிவினரின் வழிகாட்டல்களை இறுக்கமாகப் பேணி நடக்குமாறு வேண்டுகின்றோம். எனவே அரசு அங்கீகரித்த அத்தியாவசியத் தேவைகளுக்காக மட்டும், வெளியே செல்லுமாறும், மாஸ்கை (மூக்கையும் வாயையும் மூடி) முறையாக அணியுங்கள். குறிப்பாகப் பெண்களும் கட்டாயம் மாஸ்க் அணியுங்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும் பொது இடங்களில் சமூக இடைவெளிகளை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதுடன், சிறுவர்கள், வயோதிபர்கள், நாட்பட்ட நோயாளிகள் எக்காரணம் கொண்டும் வெளியே செல்வதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள், மாணவர்களை ஒன்றுகூட்டி ஆசிரியர்கள் வகுப்புக்கள் நடத்துவதையும், பெற்றோர் வகுப்புகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதையும் இவ் இக்கட்டான சூழலில் கட்டாயம் தவிர்ந்து கொள்ளுங்கள்., வெளியூரிலிருந்து (குறிப்பாக கொழும்பிலிருந்து) வருபவர்கள் தன்னை முறையான பரிசோதனைக்கு உட்படுத்துவதுடன், சுய தனிமைப் படுத்தலை மேற்கொள்ளுங்கள், 60 வயதுக்கு மேற்பட்டும் இதுவரைதடுப்பூசி போடாதவர்கள் உடன் போட்டுக் கொள்ளுங்கள்.

குடும்ப ஒன்று கூடல்கள், மரண வீடுகளில் ஒன்று கூடுவது, வீதிகளில் ஒன்று சேர்ந்து நிற்பது, கூட்டமாக பயணிப்பது போன்ற விடயங்களை கட்டாயமாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள், பொருள் விற்பனையாளர்கள் தங்கள் வாடிக்கையாளர்கள் உரிய சுகாதார ஒழுங்கில் பொருள் கொள்வனவு மேற்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுங்கள், உரிய சுகாதார ஒழுங்குகளைப் பேணாத தனிநபர்கள், விற்பனை நிலைய உரிமையாளர்கள் மற்றும் சமூகம் ஒன்று கூடும் இடங்களின் பொறுப்பாளர்கள்தங்கள் மீது சட்டரீதியான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

கொரோனா நோய் அடையாளம் உள்ளவர்கள் அதை மறைக்காமல் உடன் வைத்தியசாலையை நாடுங்கள். எமது வைத்தியசாலையில் சிகிச்சை செய்வதற்கான சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.. நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் உங்கள் உயிருக்கு ஆபத்தாகலாம் எனவே மேற்படி விடயங்களில் கூடிய அவதானத்தை செலுத்தி நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இது காலவரை மரணம் நெருங்கியவர்கள் நம் கண் எதிரே ஸகராத்தைச் சந்தித்தார்கள். கடைசி கட்டத்தில் நாம் அருகில் இருந்து கலிமா சொல்லிக் கொண்டிருந்தோம். மரணித்தால் நாம் அடிக்கழுவி எல்லோரும் ஜனாஸாவைப் பார்த்து பின் குளிப்பாட்டி, கபனிட்டு, ஊரவர் ஒன்று சேர்ந்து தொழுவித்து அடக்கம் செய்தோம். அடக்கிய பின் கூடி நின்று துஆ செய்தோம். கொரோனாவில் மரணித்தால் இவை எதுவும் முறையாக நமக்கு நடக்காது. யாரையும் யாரும் பார்க்கவோ, அருகில் கூட நெருங்கவோ முடியாது. கண் காணாத பிரதேசத்தில் அல்லவா எம் ஜனாசாக்கள் அடக்கப்படும். இந்நிலை நமக்கு வேண்டுமா ? அலட்சியமாகவும், அஜாக்கிரதையாகவும் இருந்தால் கொரோனாவிலிருந்தும் தப்ப முடியாது. எனவே சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாகப் பேணி தம்மையும், தம் வீட்டையும், ஊரையும், நாட்டையும் காக்க முன்வருமாறு வேண்டுகின்றோம். அத்துடன், நோன்பு பிடித்து, தொழுது, தர்மம் செய்து, அழுது அல்லாஹ்விடம் மன்றாடுமாறும் வேண்டுகின்றோம் என குறிப்பிட்டுள்ளனர்.

# சுவிஸ் வாழ், விஜி ஜீவாதம்பதியினரால் இளைஞர் சேனை ஊடாக மூன்றாவது வீடு!



(கேதீஸ்)

சுவிஸ் நாட்டில் வசிக்கும் கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த சமூக சேவையாளர் விஜயகுமாரன் (விஜி) குபேரலட்சுமி(ஜீவா) தம்பதிகளின் நிதிப்பங்களிப்பில் கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையூடாக மூன்றாவது இல்லம் அமைக்கப்படுகின்றது.

பொத்துவில் இராவணன் விழுதுகள் அமைப்பு கல்முனை பிராந்திய இளைஞர் சேனையிடம் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக இந்த இல்லம் பொத்துவில் பிரடிதேசத்தில் அமைக்கப்படுகின்றது இதற்கான அடிக்கல் அண்மையில் நடப்பட்டு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

திருமதி. குபேரலெட்சுமி விஜயகுமாரன்(ஜீவா) அவர்களின் தந்தையார் இளையதம்பி பாலசுந்தரம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவர் வாழ்ந்த மற்றும் அதிபராக கடமையாற்றிய பொத்துவில் பிரதேசத்தில் அவரது நினைவாக பொத்துவில் இஞ்பெக்ட்டர் ஏத்தம் கிராமத்தில் வசிக்கும் வறிய குடும்பத்திற்காகவே இல்லம் ஒன்றை அமைக்க முன்வந்து அடிக்கல் நாட்டப்பட்டது.

விஜி ஜீவா தம்பதியினரால் பாண்டிருப்பில் இரண்டு வீடுகள் கட்டி கையளிக்கப்பட்டுள்ளன.

# ஒரு மாத சம்பளத்தை கோவிட் நிவாரண நிதிக்கு நன்கொடையாக வழங்கிய அமைச்சர்



(பைஷல் இஸ்மாயில்)

ஆகஸ்ட் மாத சம்பளத்தை கொவிட் நிவாரண நிதிக்கு நன்கொடையாக வழங்க சுதேச வைத்திய முறைமைகள் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார சேவைகள் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி முடிவு செய்துள்ளார்.

கொவிட் தொற்றுநோயை எதிர்கொள்ளும் மக்களின் அவலநிலையைக் கருத்தில் கொண்டு தனது ஆகஸ்ட் மாத சம்பளத்தை நன்கொடையாக வழங்க முடிவு செய்து சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் திருமதி குமாரி வீரசேகரவுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

# மன்னாரில் கோரோனா தோற்றாளார்களின் எண்ணிக்கை தோடர்ந்து அதிகரிப்பு

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு கிடைக்கப் பெற்ற தகவலின்படி கொரோனா தொற்றாளர்களாக மன்னார் மாவட்டத்தில் 46 நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்கள்.

இது தொடர்பாக மன்னார் பிராந்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்திருப்பதாவது;

மன்னார்ரில் மேற்கொள்ளப்பட்ட பிசீ ஆர் மற்றும் அன்ரிஜீன் பரிசோதனையில் 21.08.2021 அன்று சனிக்கிழமை கிடைக்கப்பெற்ற விபரத்தின்படி 46 நபர்களுக்கு கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் மன்னார் பொது வைத்தியசாலை. முருங்கன் ஆதார வைத்தியசாலை, அடம்பன் மற்றும் பேசாலை மாவட்ட வைத்தியசாலைகள், பொதுவாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளில் திருக்கேதீஸ்வரம், நானாட்டான் மற்றும் மாந்தை மேற்கு சுகாதார சேவைகள் பிரிவுகளிலேயே இவ் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடம் (20201) மொத்தமாக இதுவரை மன்னார் மாவட்டத்தில் 1423 பேர்; கொரோனா தொற்றாளர்களாக காணப்பட்டுள்ளனர். கொரோனா ஆரம்பகாலத்திலிருந்து மன்னாரில் இதுவரைக்கும் 1440 நபர்கள் இவ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிசீ ஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகளில் தற்பொழுது மன்னார் பகுதியில் நூற்றுக்கு 5 தசம் 08 என்ற விகிதாசரத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரிப்பாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மரண வீதம் முதலில் தசம் 94 ஆக இருந்தவை தற்பொழுது தசம் 91 ஆக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிரானில் வீடு வீடாக சேன்று தடுப்பூசி

(ந.குகதர்சன்)

கிரான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் தடுப்பூசி பெறாத அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வீடு வீடாக சென்று தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரி.திவாகரன் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் கிரான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் தடுப்பூசி பெறாத அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஆர்.இன்பராஜாவின் மேற்பார்வையில் வீடு வீடாக சென்று இன்று ஞாயிற்றுக்கிழமை தடுப்பூசி ஏற்றப்பட்டது.

நாட்டில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட நிலையில் வைத்திய அதிகாரி அலுவலக பிரிவினால் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டு வரும் நிலையில் தடுப்பூசி பெறாத அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் தகவல் வழங்கி வரும் பட்சத்தில் வீடு வீடாக சென்று தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.



வீடு வீடாக சென்று தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

தடுப்பூசி போடப்படும் நிலையத்துக்கு வர இயலாதவர்களின் வீட்டுக்கு வந்து தடுப்பூசி போடத் தயாராக இருப்பதாகவும் இலங்கையில் கொவிட் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும், இதுவரை எந்தவொரு கொவிட் எதிர்ப்பு தடுப்பூசியும் பெறாத அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் உடனடியாகத் தகவல் தெரிவிக்குமாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஊரடங்கு நேரத்தில் கடைகளில் வியாபாரம் மேற்கோண்ட ஆறு பேர் கைது

எப்.முபாரக்

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஊரடங்கு நேரத்தில் கடைகளில் வியாபாரம் மேற்கொண்ட ஆறு பேரை சனிக்கிழமை (21) கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய், பேராறு,வட்டுக்கச்சி மற்றும் மத்ரஸா நகர் போன்ற பகுதிகளில் நாட்டில் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில் கடைகளை திறந்து வியாபாரம் மேற்கொண்டு வந்துள்ள நிலையிலே பொலிஸாரினால் ஆறு பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் ஹோட்டல்கள்,சில்லறைக் கடைகளை திறந்து வியாபாரம் செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தடுத்து வைத்துள்ளதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.






SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...


மருத்துவ காப்புறுதி

வாகனக் காப்புறுதி

குழந்தைகளுக்கான
காப்புறுதி

ஆயுட் காப்புறுதி

சட்டக் காப்புறுதி


Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65



உதயகுமார் கல்வி நிலையம்


முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923

n.uthayakumar1981@gmail.com



SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி




SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்


ECDL
Office
Windows 10

தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59



Aaran Ayurveda
& Wellness Massage



Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# ஆசியா சாதனை புத்தகத்தில் நிந்தவூர் சிறுமி புதிய சாதனை



(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் முதலாம் பிரிவைச் சேர்ந்த எம்.ஜே.பாத்திமா அனத் ஜிதாஹ் சாதனைச்சுட்டி (கிராண்ட் மாஸ்டர்) மகுடத்தையும், ஆசிய நாடுகளின் கொடிகளை மிக வேகமாக அடையாளம் காணக்கூடியவர் (Fastest to Identify Flags of all Asian Countries)' என்ற படத்தையும் வென்று நமது நாட்டிற்கும், எமது அம்பாறை மாவட்டத்திக்கும் பெருமை சேர்த்துள்ளார் என கல்முனை பொது ஜன பெரமுன கட்சியின் அமைப்பாளரும் கிழக்கு மாகாண தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

இச் சாதனையினை ஏற்படுத்திய சிறுமியினை கௌரவிக்கும் முகமாக அண்மையில் அச்சிறுமியின் இல்லத்திற்குச் சென்று நேரடியாக பரிசில்கள் வழங்கி தனது பாராட்டுக்களை தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அனைத்து ஆசிய நாடுகளின் கொடிகளையும் மிக வேகமாக அடையாளம் கண்ட முதல் ஆசிய சிறுமி இவரேயாவார். டிசம்பர் 3, 2016 இல் பிறந்த இவர், தனது 4 வயது 8 மாதங்களில் அனைத்து 48 ஆசிய நாடுகளின் கொடிகளையும் வெறும் 24 வினாடிகளில் வேகமாக அடையாளம் கண்டு ஆசியா சாதனை புத்தகத்தில் தன் பெயரை பதித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறு வயதிலேயே சிறந்த ஞாபக சக்தியும் பல திறமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இவர் எம்.எல். எம். ஜெஸீம் மற்றும் யு.கே. பாத்திமா ஜவ்ஹறா தம்பதிகளின் செல்வ புதல்வி ஆவார்.

கிராண்ட் மாஸ்டர் பாத்திமா அனத் ஜிதாஹ்வின் இச்சாதனையை உளமாற பாராட்டுவதோடு இப்படியான இளம் சாதனை சுட்டிகளை பாராட்டுவதில் எப்போதும் நான் பின் நிற்பதில்லை என பொது ஜன பெரமுனவின் கல்முனை அமைப்பாளர் றிஸ்வி முஸ்தபா தெரிவித்தார்

# தோட்டப் பயிர்களை துவம்சம் செய்த யானை



(ந.குகதர்சன்)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மஜ்மாநகர் கிராமத்தில் இரவு வேளைகளில் யானைகளின் அட்டகாசத்தால் சொத்துக்கள் சேதமாக்கப்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மஜ்மாநகர் கிராமத்தில் வாழும் மக்கள் தங்களது காணியில் பயன்தரும் மரங்கள் மற்றும் மரக்கறி தோட்டங்கள் அமைத்து பராமரித்து வரும் நிலையில் இரவு வேளைகளில் வரும் யானைகள் இவற்றை சேதப்படுத்தி செல்லும் நிலைமை காணப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் சனிக்கிழமை இரவு மஜ்மாநகர் கிராமத்திற்கு வருகை தந்த யானை மூன்று நபர்களின் வீட்டுத் தோட்டத்தில் காணப்பட்ட தென்னை மரங்கள், மா மரங்கள், மரவள்ளி தோட்டம், தண்ணீர் குழாய் மற்றும் வேலிகளை துவசம்சம் செய்து சென்றுள்ளது.

இம்மாதம் மாத்திரம் மஜ்மாநகர் கிராமத்திற்கு இரவு வேளையில் யானைகள் இரண்டு தடவைகள் வருகை தந்து பயிர்களை துவம்சம் செய்து வீட்டு உபகரணங்களையும் சேதப்படுத்தி சென்றுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மஜ்மாநகர் பகுதி மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கும், பயிர்களை யானைகள் துவம்சம் செய்யாது எமது பகுதியை சுற்றி யானை வேலி அமைத்து தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மின்னல் தாக்குதலால் வீட்டுக்கு பலத்த சேதம் மின் உபகரணங்கள் முற்றாக பாதிப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



இரண்டு நாட்களாக ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் பல பிரதேசங்களில் மின்னலுடன் கூடிய கணத்த மழை பெய்து வருகின்றது.

இந் நிலையில் திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேசத்தில் காக்காமுனை கிராம உத்தியோகத்தர் பிரிவில் மின்னல் தாக்கி வீடு ஒன்று சேதமடைந்துள்ளது.

நேற்று முன் தினமிரவு மணியளவில் தாக்கிய மின்னல் காரணமாக வீட்டின் மின்சார சுற்று, இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் மின்சாரச்சுற்று இருந்த சுவர்பகுதியும் கூரைப் பகுதியும் வெடிப்புக்குள்ளாகி முற்றாக சேதமடைந்துள்ளதாக வயது முதிர்ந்த கணவன், மனைவி தெரிவிக்கின்றனர்.

வீட்டில் உள்ளவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை எனவும் தெரியவருகின்றது. இருந்த போதிலும் தாங்கள் உயிர் தப்பியதாகவும் கண்ணீர் வடிக்கின்றனர்.

குறித்த வீட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு எந்தவிதமான மின்சார உபகரணங்களும் இயங்கவில்லை எனவும் பழுதடைந்துள்ளதாக மேலும் தெரிவிக்கின்றனர். பகுதியளவில் பலத்த சேதங்களுக்கு உள்ளான வீட்டுச் சுவர், மின்சார உபகரணங்களை பெறுவதற்கான நடவடிக்கைகளை துரியமாக பெற்று தருமானு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

# முற்றாக முடங்கியது திருமலை!



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் எதிர்வரும் 30 ம் திகதி அதிகாலை 4 மணி வரைக்கும் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்ட நிலையில்,திருகோணமலை மாவட்டத்தில் சகல வர்த்தக நிலையங்களும் நேற்று மூடப்பட்டு முழு நகரமும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

திருகோணமலை மத்திய பேரூந்து நிலையம், பொது சந்தை கட்டிடத் தொகுதி, மொத்த சில்லறை விற்பனை நிலையங்கள், கட்டட பொருட்கள் விற்பனை நிலையங்கள் உட்பட ஹோட்டல்களும் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனால் திருகோணமலை, உப்பு வெளி, மூதூர், கிண்ணியா, குச்சவெளி, வெருகல், தம்பலகாமம், உட்பட முழு பிரதேசங்களும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

# மட்டக்களப்பில் அதிகரிக்கும் சட்டவிரோத மதுபானம்



மட்டக்களப்பில் ஊரடங்கு நேரத்திலும் சட்டவிரோத மதுபானம் ,கசிப்பு விற்பனையில் ஈடுபடுவோரை இலக்கு வைத்து பொலிசார் தேடுதல் வேட்டைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதூர், சேற்றுக்குடா பிரதேசங்களில் பொலிசார் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது 10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரும் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட இன்னுமொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிசார் தெரிவித்தனர்.

# கவடாப்பிட்டி கிராமத்தில் குடிநீர் தாங்கி திறந்து வைப்பு



வி.சுகிர்தகுமார்

அம்பாரை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கவடாப்பிட்டி மற்றும் மழவராஜன் கிராம மக்களின் குடிநீர் பிரச்சினைக்கான தீர்வு ஓரளவு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இதற்கான முயற்சியை அம்பாரை மாவட்ட ஆலம் விழுதுகள் அமைப்பு மேற்கொண்டதுடன் நிதியுதவியை கனடா நாட்டில் வசிக்கும் இளம் தம்பதியொன்று வழங்கி வைத்துள்ளது.

இதற்கமைவாக குறித்த கிராமத்தில் 1%0 அடி ஆளத்தில் இருந்து நீர் பெறப்படும் குழாய் கிணறு நீர் மூலம் பெறப்பட்ட குடிநீர் தாங்கி இன்று திறந்து வைக்கப்பட்டது.

ஆலம் விழுதுகள் அமைப்பின் இணைப்பாளர் சு.சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாஸ்டர் தங்கராஜா கலந்து கொண்டு இறை ஆராதனையை மேற்கொண்டார். பின்னர் குழாய் கிணற்றின் நீர்தாங்கியை திறந்து வைத்தார்.

இதேநேரம் பொதுமக்கள் பாவனைக்கான குடிநீர் இணைப்புக்களும் திறந்து வைக்கப்பட்டன.

தொடர்ந்து அவ்விடத்தில் மரக்கன்றொன்றும் நாட்டி வைக்கப்பட்டது.

நிகழ்வில் கிராமத்தின் சார்பில் சி.சீதா மற்றும் எறிங்டன் அமைப்பின் உறுப்பினர்களான எஸ்.பிரபாகரன் எஸ்.உதயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பல வருடங்களாக குடிநீர் பிரச்சினையை எதிர் கொண்டு வந்த சுமார் 70இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதன் மூலம் நன்மையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# போதுமுடக்கம் தொடர்பில் ஆராய பல்வேறு பகுதிகளுக்கும் திடீர் விஜயம் செய்த கல்முனை முதல்வர்

(பாறுக் ஷிஹான்)



கொரோனா அனர்த்த நிலைமையினை அடுத்து நாட்டில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பொதுமுடக்கம் மற்றும் கொரோனா தடுப்பு செயற்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக கண்காணிப்பு நடவடிக்கை ஒன்றினை கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையிலான குழுவினர் இன்று மேற்கொண்டிருந்தனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ள பொதுமுடக்கம் காரணமாக பொதுமக்கள் அத்தியவசியத் தேவை தவிர்ந்து வழமையாக வெளியில் நடமாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

நேற்று அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபை பிரதேசங்களிலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மக்கள் முழுமையாக கடைப்பிடித்து வருகின்றார்களா என்பதை ஆராய்வதற்காக கல்முனை இராணுவ மேஜர் சாந்த விஜேயகோன் உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் குழுவுடன் இணைந்து கல்முனை ,பெரிய நீலாவணை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, மருதமுனை , சேனைக்குடியிருப்பு , சாய்ந்தமருது ,உள்ளிட்ட பகுதிகளுக்கும் கரையோர பிரதேசங்களில் உள்ள முக்கிய பொது இடங்களிற்கும் சென்று மக்களை அறிவுறுத்தியதுடன் பொதுமுடக்க நேரத்தில் அனுமதி இன்றி வியாபார நடவக்கையில் ஈடுபட்ட வியாபார உரிமையாளர்களுக்கும் எச்சரிக்கை விடுத்திருந்தார். அத்துடன் கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மதித்து மக்கள் வீடுகளில் முடங்கி உள்ளதுடன் அத்தியவசிய சேவை வழமை போன்று இயங்கிவருவதுடன் மருந்தகங்கள் திறந்துள்ளதை காண முடிகிறது.

தற்போதைய சூழ்நிலையில் பொது மக்கள் சுகாதார வழிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்றும் மீறுபவர்கள் மீதி கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதோடு முகக்கவசம்இ சமூக இடைவெளி போன்றவகளை கண்டிப்பாக கடைப்பிடிப்பது தொடர்பிலும் பொதுமக்களுக்கு கல்முனை மாநகர முதல்வருட்ன வருகை தந்த அதிகாரிகள் தெளிவு படுத்தினர்.



# அம்பாறையில் பொதுமுடக்கம்

## மருந்து பொருட்கள் தபால் ஊடாக விநியோகம்

## பாதுகாப்பு தரப்பினர் வீதி ரோந்து





(பாறுக் ஷிஹான்)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நேற்றிரவு 10 மணிமுதல் அமுலுக்கு வந்துள்ள பொதுமுடக்கம் காரணமாக பொதுமக்கள் அத்தியவசியத் தேவை தவிர்ந்து வழமையாக வெளியில் நடமாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

இன்று அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மக்கள் முழுமையாக கடைப்பிடித்து வருவதுடன் இன்று காலையில் பிரதான நகரங்கள் உட்பட கரையோர பிரதேசங்களில் உள்ள முக்கிய பொது இடங்கள் யாவும் வீதிகள் அனைத்தும் முற்றாக வெறிச்சோடி காணப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மதித்து மக்கள் வீடுகளில் முடங்கி உள்ளதுடன் அத்தியவசிய சேவை வழமைபோன்று இயங்கிவருவதுடன் மருந்தகங்கள் திறந்துள்ளதை காண முடிகிறது.

இதே வேளை நீண்டகால நோய்வாய்ப்பட்டோர், கிளினிக் மூலம் மருந்துகளை பெறுவோரின் நன்மைகருதி தபால் திணைக்கள தபாலகங்கள் ஊடக மருந்துகள் விநியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் தபால் திணைக்கள கடுகதி சேவையும் இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் பாதுகாப்பு தரப்பினரும் வழமை போன்று பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# அம்பாறையும் முடங்கியது; வீதிகள் வெறிச்சோடின!

(காரைதீவு நிருபர் வி.ரி. சகாதேவராஜா)



நாடளாவிய ரீதியில் நேற்று நள்ளிரவு முதல் தனிமைப் படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அம்பாரை மாவட்டமும் முடங்கியது.

பிரதான வீதிகள் அனைத்தும் வெறிச்சோடிக் காணப்பட்டன. பிரதேசங்கள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்ட நிலையில் பாமசி மற்றும் சத்தோச நிலையங்கள் உள்ளிட்ட சில அத்தியாவசிய சேவை நிலையங்கள் மாத்திரம் திறந்துள்ளன.

காரைதீவு பிரதேச பிரதானவீதி வெறிச்சோடிக்காணப்பட்டது.

அனைத்து கடைகளும் பூட்டப்பட்டிருந்தன.

அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளதுடன் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தினர் வீதிச்சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்துள்ள நிலையில் வெளியில் நடமாடுகின்றவர்களை பரிசோதனைக்குட்படுத்தி வருகின்றனர். உரிய காரணமின்றி நடமாடுகின்றவர்களை எச்சரிக்கை செய்து வீடுகளுக்கு அனுப்பியும் வருகின்றனர்.

இந்நிலையிலும் காரைதீவு பிரதேசத்தில் கொரோனா தொற்று அதிகரித்து வருவதாகவும் மக்கள் பொறுப்புடன் நடந்து கொண்டு தொற்றிலிருந்து மீண்டு வர ஒத்துழைப்பை வழங்குமாறும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார்.

# சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தின் தீர்த்தோற்சவம் இன்று நிறைவடைகிறது





வரலாற்றுப் புகழ்பெற்ற சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி கோவிலின் மகோற்சவ கொடியேற்றம் சென்ற 7ம் திகதி மிகவும் பக்திபூர்மாக இடம்பெற்றது.

தீர்த்தோற்சவ திருவிழா வழமைக்கு மாறாக பக்தர்களின் பிரசன்னத்தை மட்டுப்படுத்தி இம்முறை ஆலயத்தின் நிருவாகம் மற்றும் குருமார்கள் ஆகியோர் மாத்திரம் கலந்துகொண்டிருந்தனர்.

கொடியேற்றத்துடன் ஆரம்பமான மகோற்சவம் 16 நாட்கள் திருவிழா நடைபெற்றது. விசேட மயில்கட்டுத்திருவிழா 19ம், 20ம், 21ம் ஆகிய மூன்று நாட்களும் விசேடாக இடம்பெற்றது.

அத்துடன் கொடியிறக்கம் இன்று பி.ப 4.00மணிக்கு இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பெருந்தொற்றுக் காரணமாக அடியார்களை ஆலயத்திற்குள் வழிபாடுகளுக்கு அழைப்பதில்லை என்ற அறிவிப்பை அடுத்து அனைத்து அடியார்களும் வீடுகளில் இருந்து முருகப்பெருமானை வழிபாட்டுக் கொண்டிருந்தனர்.

ஆலயத்திற்குள் நாளாந்த பூசை செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற குருக்கள்மார் மற்றும் ஆலய பணியாளர்கள் மற்றும் நிருவாத்தினர் சுகாதார நடைமுறையைக் கடைப்பிடித்து ஆலய மகோற்சவகால செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனக் குடாவில் தனியாருக்கு சொந்தமாக படகொன்று தீக்கிரை

(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவு பகுதியில் சுற்றுலா பயணிகளை ஏற்றி செல்லும் தனியாருக்கு சொந்தமான படகு ஒன்றும் இயந்திரத்துடன் இனந்தெரியாத நபர்களினால் சீனக்குடா , சின்னம் பிள்ளைச் சேனை கடற்கரைப் பகுதியில் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து சீனக்குடா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் பாதுகாபாபு , மற்றும் திருகோணமலை பட்டனமும் சூழலும் ஆகியோரின் அனுமதியினைப் பெற்று மேற்கூரை மற்றும் சொகுசு இருக்கைகளை அமைத்து இப் பயணச் சேவைகளை மேற்கொண்டு வந்துள்ளார்.



இவரோடு தனிப்பட்ட விரோத காரணமாக இடம் பெற்றிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜி.சம்பிகாவக்கு கொரோனா தொற்று உறுதி

இஃஜாஸ் ஏ பரீட்



திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.ஜி.சம்பிகா பண்டார ஆண்டிஜன் சோதனை மேற்கொண்ட போது அவருக்கு கொவிட் 19 வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவர்தற்போது முள்ளிப் பொத்தானை அவருடைய இல்லத்தில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளார்.

இவர் தம்பலகாமம் பிரதேசச் சபை தவிசாளராக இருப்பதனால் இவரை சந்திப்பவர்கள் தவிர்த்துக் கொள்ளுமாறும் , மேலும் இவரை சந்தித்தவர்கள் தங்களை அண்டிஜன் பரிசோதனைகளை மேற்கெண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

# பணிப்பாளர் சுகுணனின் நேரடி முயற்சியினால் மூடப்பட்டிருந்த பனங்காடு வைத்தியசாலை மீண்டும் இயக்கம்

(காரைதீவு சகா வி.சுகிர்தகுமார்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குணசிங்கம் சுகுணன் தொடர்ச்சியாக மேற்கொண்ட நேரடி முய்ற்சியன் பலனாக கடந்த நான்கு தினங்களாகப் பூட்டப்பட்டு கிடந்த பனங்காடு பிரதேச வைத்தியசாலை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

பணிப்பாளர் டாக்டர் சுகுணன் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் அரச வைத்திய அதிகாரிகள் சங்க அம்பாறை மாவட்டத்தலைவர் டாக்டர் எஸ்.எம்.மாஹிர் செயலாளர் டாக்டர் எ.எல்.எம்.மாஹிர் தாக்குதலுக்குள்ளான வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஷஹீல் மற்றும் உதவிபொலிஸ் அத்தியட்சகர் இராணுவஅதிகாரி உள்ளிட்டோர் அங்கு சென்று பிரச்சினையைதீர்த்துவைக்குமுகமாக கூட்டமொன்றை நடாத்தினார்.

அதில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு கிராமத்தின் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

அனைவரின் சம்மதத்துடன் போலீசாரின் 24 மணிநேர பாதுகாப்புடன் வைத்தியசாலையை உடனடியாக பொதுமக்களுக்கு வைத்தியசேவைகளை வழங்குவதற்காக மீண்டும் திறக்கப்பட தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

நான்கு தினங்களுக்கு முன் அலிக்கம்ப பிரதேசத்தில் இருந்து அக்கரைப்பற்று பனங்காடு பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த சிலருக்கும் அங்கிருந்த வைத்தியருக்குமிடையில் இடம்பெற்ற முரண்பாடு காரணமாக அங்கு பணியாற்றும் வைத்தியஅதிகாரி தாக்கப்பட்டதனால் அங்கு கடமையாற்றும் வைத்தியர்கள் தாதிகள் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து பணிக்கு வராமை காரணமாக நான்கு நாட்களாக வைத்தியசாலை பூட்டப்பட்ட நிலையில் இருந்தமை தெரிந்ததே.

இது தொடர்பில் டாக்டர் சுகுணன் கருத்துரைக்கையில்:

வைத்தியரின் வைத்தியதுறையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய கட்டாயம் என்மீது உள்ளது. அதேவேளை மக்களுக்கான சுகாதாரசேவை என்பதும் முக்கியமானது. அதனை மனதிற்கொண்டு சகலதரப்பினரையும் அணுகி இன்று இவ்வாறானதொரு முடிவுக்கு வந்தோம்.



ஒத்துழைத்த சகலருக்கும் நன்றிகள்.

வளத்தில் ஆரம்ப சுகாதார பிரிவாக காணப்பட்ட இந்த வைத்தியசாலையை பிரதேச வைத்தியசாலையாக மாற்றி பற்சிகிச்சைப்பிரிவு நவீன வைத்திய ஆய்வுகூடம் அத்துடன் இருமாடி கட்டிடத்தொகுதி என்பவற்றை ஏற்படுத்தி கொடுத்ததுடன் அந்த கட்டிடத்தொகுதிக்கு தேவைப்பட்ட மேலும் ஐந்து மில்லியன் ரூபாவை இன்று ஒதுக்கீடு செய்ததுடன் மகிழ்ச்சியுடன் அந்த ஏதுமறியா மக்களுடன் அளவளாவி விடைபெற்றேன். என்றார்.

# சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையாக தரமுயர்வு

(ஏ.பி.அப்துல் கபூர்)

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்தில் உள்ள சாய்ந்தமருது மழ் ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலயம் அண்மையில் அரசாங்கத்தின் 1000 தேசிய பாடசாலைகள் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு தேசிய பாடசாலையாக தரம் உயர்வு பெற்றுள்ளது என அப்பாடசாலையின் அதிபர் அல்ஹாஜ் எம். எஸ். எம். ஐ. மதனி தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், அரசாங்கத்தின் புதிய இத்திட்டத்தில் சாய்ந்தமருது பிரதேசத்திலிருந்து இத்திட்டத்தினுள் தெரிவுசெய்யப்பட்ட முதன்மையான பாடசாலையாக இப்பாடசாலை திகழ்கின்றது. இப்பாடசாலையினை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கு மிகவும் அர்ப்பணிப்புடனும் அயராத முயற்சியுடனும் செயற்பட்ட முன்னாள் மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி. நிசாம் அவர்களுக்கு எமது பாடசாலையின் ஆசிரியர் குழாம், பாடசாலை அபிவிருத்திச் சபை உட்பட இப்பிராந்தியத்தின் சமூக ஆர்வலர்கள் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

மேலும் இப்பாடசாலையினை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் கௌரவ அனுராதா யகம்பத் அவர்களுக்கும் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டப்ளியூ.டி. வீரசிங்க ஆகியோருக்கும் பாடசாலை சமூகத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம் என தெரிவித்தார்.



முன்னாள் மாகாண கல்விப் பணிப்பாளரின் இச்சேவையினை இப்பிராந்திய மக்கள் ஒருபொழுதும் மறக்கக்கூடாது. இப்பாடசாலை தேசிய பாடசாலையாக தரம் உயர்வு பெற்று அதன் மூலம் இப்பிராந்தியம் பெருமையடைகிறது. கல்முனை கல்வி வலயத்தில் இத்திட்டத்தில தேசிய பாடசாலைகள் ஆக உள்வாங்கப்பட்ட 9 தேசிய பாடசாலைகளுக்கு மாண கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் கல்முனை கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ் புவனேந்திரன் அவர்களின் தலைமையில் கல்முனையில் தேர்தல் தொகுதி எண் பொதுஜன பெரமுன கட்சியின் அமைப்பாளர் றிஸ்வி முஸ்தபா அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கடிதங்களை வழங்கி வைக்கப்பட்டது.

தேசிய பாடசாலைக்கான கடிதத்தினை நிகழ்வின் பிரதம அதீதியிடமிருந்து பாடசாலையின் அதிபர் எம். எஸ். எம். ஐ. மதனி, பிரதி அதிபர் ஏ.எல்.எம். தன்னில் உட்பட பாடசாலை அபிவிருத்தி குழுவின் செயலாளர் எம். எச்.எம். சஹாப் ஆகியோர் பெற்றுக் கொள்வதனை படத்தில் காணலாம்.